Regd with the Registrar of Newspapers for India No. TN TAM/2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12












Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223 Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# இனி எக்காளம்

VOL. 6 ISSUE. 5 தனிப்பிரதி ரூ20/= ஜனவரி 2013



# ஜெபத்திற்கு பதில் கொடுப்பவர்..

- நிஜா கென்னடி



தேவன் நம்மை உண்டாக்கினதன் நோக்கமே அவரோடுகூட உறவாடுவதற்காகவே. நாம் எப்பொழுதும் அவரோடுகூட ஐக்கியமாய் இருக்க தேவன் விரும்புகிறார். **ஏனோக்கு தேவனோடுகூட சஞ்சரித்துக் கொண்டிருந்தான்** (ஆதியாகமம் 5:22). **நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்** (ஆதியாகமம் 6:9). மோசே நண்பனோடு பேசுவதுபோல கர்த்தரோடு பேசினான். கர்த்தரோடுகூட நெருங்கி வாழ்ந்தான். நாமும் கர்த்தரோடுகூட ஐக்கியமாய் இருக்க வேண்டும். தினமும் வேதத்தை படிக்கிறவர்களாக, தியானிக்கிறவர்களாக, அதன்படி நடக்கிறவர்களாக, ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து மனிதனாய் இந்த உலகத்துக்கு வந்தபோது, பிதாவோடுகூட ஜெபிப்பதற்காக, தனிமையான இடத்திற்கு சென்றார்.

**துன்மார்க்கருக்குக் கர்த்தர் தூரமாயிருக்கிறார்; நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார்** (நீதிமொழிகள் 15:29). இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவங்கள் கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்படும்போது, நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். தேவனுடைய பிள்ளைகளாய் நாம் மாறிவிடுகிறோம். அவருடைய பிள்ளைகளாய் இருந்து ஜெபிக்கும் ஒவ்வொருவருடைய ஜெபத்தையும் கர்த்தர் எப்பொழுதும் கேட்கிறவராயிருக்கிறார்.

**கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது** (சங்கீதம் 34:15). கர்த்தருக்கு பயந்து, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்கிறவர்களுடைய ஜெபத்தை கர்த்தர் கேட்கிறார். கர்த்தரை பின்பற்றி அவர்மேல் உள்ள வாஞ்சையினால், முழு இருதயத்தோடு ஜெபிக்கும் ஜெபத்திற்கு கர்த்தர் பதில் கொடுக்கிறார். **தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார். அவர் தமக்கு பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக்கேட்டு அவர்களை இரட்சிக்கிறார்** (சங்கீதம் 145:18,19).

**வேதத்தைக் கேளாதபடி, தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது** (நீதிமொழிகள் 28:9). இருதயத்தில் உண்மையும், உத்தமுமாக இல்லாமல் வெளியே மிகவும் நல்லவர்கள் போல் நடந்து கொள்பவர்களின் ஜெபத்தை கர்த்தர் கேட்கமாட்டார். **என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்கு செவிகொடார்** (சங்கீதம் 66:18). நம்முடைய இருதயம் தூய்மையாக இருந்தால் கர்த்தர் நம் ஜெபத்தை கேட்பார். மெய்யாய் தேவன் எனக்கு செவிகொடுத்தார். என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். என்னுடைய இருதயத்தில் அக்கிரமச் சிந்தையில்லை. ஆகையால் தேவன் எனக்குச் செவி கொடுத்தார். என் பாவங்களை தேவன் மன்னித்து விட்டார் என்ற நிச்சயம் எனக்குள் வந்திருக்கிறது என்று தாவீது கூறுகிறான். நம் இருயத்தில் பாவத்தை வைத்துக் கொண்டிருந்தோமானால், நம் ஜெபத்திற்கு பதில் கிடைக்காது. நம் ஜெபத்திற்கு பதில் கிடைக்க வேண்டுமானால், உண்மையான மனந்திரும்புதல் அவசியம். நாம் செய்த தவறை உணர்ந்து மன்னிப்பை பெற்றுக் கொள்ளவேண்டும். இனி அந்த பாவத்தை செய்யமாட்டேன் என்று தீர்மானம் எடுக்க வேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

நம் ஜெபங்களுக்கு பதில் கிடைக்காததற்கு நம் பாவங்களே தடையாயிருக்கிறது. பாவம் தேவனைவிட்டு நம்மை பிரிக்கிறது. **துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது; செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்** (நீதிமொழிகள் 15:8). பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெற்றுக் கொண்டவர்களின் ஜெபத்திற்கு பதில் கிடைக்கிறது.

சிலர் மற்றவர்கள் தங்களை நன்றாக ஜெபிக்கிறவர்கள் என்று சொல்ல வேண்டும் என்பதற்காக தங்களை ஜெபிக்கிறவர்களாக வெளியே காண்பித்துக் கொள்வார்கள். உண்மையில் அவர்களுக்கும் கர்த்தருக்கும் எந்தவித ஐக்கியமும் இருக்காது. வேதத்தைப் படிக்கமாட்டார்கள்; அதன்படி நடக்கமாட்டார்கள். தங்கள் சுய வழியிலேயே நடப்பார்கள். சிலர் மற்றவர்கள் ஜெபிக்கிறார்களே நாமும் ஜெபிக்க வேண்டும் என்று கடமைக்காக ஜெபிப்பார்கள். இவர்கள் உண்மையாக கர்த்தரை நேசிக்காமல், கர்த்தர்மேல் உள்ள அன்பினால் நிறைந்து ஜெபிப்பதில்லை. சடங்காச்சாரமாக, பாரம்பரியமாய் ஜெபிப்பார்கள். நன்றியுள்ள இருதயத்தோடு, நம்மைத் தாழ்த்தி ஜெபிக்கும் ஜெபத்திற்கு கர்த்தர் பதில் கொடுக்கிறார்.

நாம் செய்த பாவங்களுக்காக தம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, பாவமாகிய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, கர்த்தர் நம்மை மீட்டெடுத்திருக்கிறார். அதை

ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

சிலர் மற்றவர்கள் பார்க்கும்படியாக, கேட்கும்படியாக ஜெபிப்பார்கள். கர்த்தருடைய வார்த்தை என்ன சொல்லுகிறது என்றால், **அன்றியும், நீ ஜெபம் பண்ணும்போது, மாயக்காரரைப் போலிருக்கவேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப்பூட்டி அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள் அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அறிந்திருக்கிறார்** (மத்தேயு *6:5-8*).

இருதயத்தில் உணராமல் வார்த்தைகளைச் சொல்லி ஜெபிப்பது வீண். **இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது** (மாற்கு *7:6*). இருதயத்தில் உணர்ந்து, வேதவார்த்தைகளைச் சொல்லி, ஜெபிக்கும் ஜெபம் வல்லமையானது.

**நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்** (யோவான் *15:7*). வேத வார்த்தையை படித்து நாம் அறிந்து கொள்ளும்போது, உரிமையோடும், அதிகாரத்தோடும், வல்லமையோடும் ஜெபிக்க வார்த்தை வழிகாட்டும். நாம் கர்த்தரோடு நெருங்கி வாழ, வார்த்தையை படித்து அவரோடுகூட உள்ள உறவில் வளர வேண்டும். அவருக்கு பிரியமான ஒரு வாழ்க்கையை வாழவேண்டும். வார்த்தையை பின்பற்றி நடக்கிறவர்களுடைய ஜெபம் கேட்கப்படும். **கேளுங்கள், அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்** (மத்தேயு *7:7*). **கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான்.**

மேலும் **விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்** என்றார் (மத்தேயு *21:22*). நாம் விசுவாசத்தோடு ஜெபிக்கும் ஜெபத்திற்கு பதிலை பெற்றுக் கொள்வோம். விசுவாசத்தோடு, வல்லமையோடு கூடிய ஜெபம் நாம் நம்புவதற்கு முடியாத கடினமான காரியங்களை செய்து கொடுக்கும்.

### அன்னாளின் ஜெபம்

அன்னாளுக்கு பிள்ளையில்லாதிருந்தது. அதனால் அவள் மனவேதனையோடு, துக்கத்தோடு இருந்தாள். அவள் தனக்கு ஒரு ஆண்பிள்ளை





யைக் கொடுக்கும்படி, தன் இருதயத்தை ஊற்றி கர்த்தரிடம் உண்மையாய் ஜெபித்தாள் (1 சாமுவேல் *1:11*). கர்த்தர் அந்த ஜெபத்திற்கு பதில் கொடுத்தார். அன்னாள் தன் வேதனையை கர்த்தரிடம் தெரிவித்தாள், கர்த்தரால் எல்லாம் செய்ய முடியும், தன் ஜெபத்திற்கு கர்த்தர் பதிலளிப்பார் என்று விசுவாசித்தாள். அவள் ஜெபித்து முடித்தபின் துக்கமுகமாய் இருக்கவில்லை (1 சாமுவேல் *1:18*). கர்த்தர் தனக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால் அதை கர்த்தருக்கே கொடுப்பதாகப் பொருத்தனையோடு ஜெபித்தாள். கர்த்தர் அவள் மனவிருப்பத்தை நிறைவேற்றினார். கர்த்தருடைய ஊழியத்திற்கென்று அந்த பிள்ளையை ஒப்புக்கொடுத்தாள். நம்மில் அநேகர் ஜெபிக்கிறோம். ஜெபித்தபின்னரும், துக்கமுகமாய் இருக்கிறோம். நாமும் அன்னாளைப்போல கர்த்தர் நம் ஜெபத்திற்கு பதில் கொடுப்பார் என்று விசுவாசத்தோடுகூட இருப்போம். அன்னாளின் ஜெபத்திற்கு பதில் கொடுத்த தேவன் நம் ஜெபத்திற்கும் பதில் கொடுப்பார்.

சில வேளைகளில் ஜெபத்திற்கு பதில் தாமதமாக வரலாம். ஏற்ற வேளையில் கர்த்தர் நம் ஜெபத்திற்கு பதில் கொடுப்பார். அவருடைய வேளை வரும்வரை பொறுமையோடு காத்திருக்கவேண்டும். மற்ற மனிதர்களிடம் நம் பிரச்சனைகளைச் சொல்லாமல் கர்த்தரிடம் சொல்வோம்.

நம்முடைய சூழ்நிலைகள் சாதகமற்று இருக்கும்போது, காரியங்கள் கைகூடிவராமல் இருக்கும்போது, உறவுகளில் விரிசல்கள் வரும்போதும், தொழிலில், வேலைகளில் பின்தங்கியிருக்கும்போதும், நம்மால் விசுவாசத்தோடு ஜெபிக்க கடினமாக இருக்கும். அன்னாளைப்போல மனவேதனையின் மத்தியிலும் விசுவாசத்தோடுகூட ஜெபிக்க கற்றுக் கொள்ள வேண்டும். பிரச்சனைகளை கர்த்தரிடம் ஒப்படைத்துவிடவேண்டும். இக்கட்டான வேளையிலும் கர்த்தரை நோக்கி விசுவாசத்தோடு உதவிக்காக கூப்பிடும்போது, கர்த்தர் நமக்கு உதவி செய்வார். இக்கட்டிலிருந்து நம்மை விடுவித்து பாதுகாப்பார். மனிதனுடைய பார்வையில் முடியாது என்று நினைப்பவற்றை கர்த்தர் முடித்துக்கொடுப்பார். வேலையில் உயர்வை கட்டளையிடுவார். தொழிலில் முன்னேற்றத்தை தருவார். முறிந்த உறவுகளை மீண்டும் இணைப்பார். தவறான உறவுகளை முறித்து போடுவார். வேதனைகளை நீக்கி சமாதானம், சந்தோஷம் தருவார். நாம் கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போதுதான், கர்த்தர் நமக்கு

உதவி செய்வார்.



### ஜெபமும், விடுதலையும்

ஏரோது, பேதுருவைக் கைது செய்து, சிறைச் சாலையில் வைத்தான். பேதுரு இரண்டு சங்கிலிகளால் கட்டப்பட்டு இரண்டு சேவகருக்கு நடுவே படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். **சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத் தோடே ஜெபம் பண்ணினார்கள்** (அப்போஸ்தலர் *12:5*). அப்பொழுது திடீரென்று கர்த்தருடைய தூதன் சிறைச்சாலையில் வந்து நின்று, பேதுருவைத் தட்டி எழுப்பினான். உடனே கைகளிலிருந்து சங்கிலிகள் கழன்று விழுந்தது. பேதுருவை தூதன் தன் பின்னே வரும்படி கூறினான். அவர்கள் முதல் காவலையும், இரண்டாம் காவலையும் கடந்தனர். நகரத்துக்குப்போகிற இரும்புக்கத வண்டையிலே வந்தபோது, அது தானாய் அவர்களுக்குத் திறந்தது. பேதுருக்கு தெளிவு வந்தபோது, கர்த்தர் உண்மையாகவே தேவதூதனை அனுப்பி ஏரோதின் கைக்கும் யூத ஜனங்களின் எண்ணங்களுக்கும் தன்னை விடுதலையாக்கினார் என்பதை உணர்ந்து கொண்டான். பின் அவன் மாற்குவின் தாயாகிய மரியாள் வீட்டிற்குள் சென்றான். அங்கே அநேகர் கூடி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். பேதுரு கர்த்தர் தன்னை எப்படி சிறையிலிருந்து விடுவித்தார் என்பதை விவரித்துச் சொன்னான். சபையார் கருத்தோடு ஜெபித்ததின் பலனால் வழக்கத்திற்கு மாறான சம்பவத்தை காணமுடிந்தது.

அநேகர் கூடி ஜெபிக்கும்போது கர்த்தர் பலத்த காரியங்களைச் செய்வார். நினைத்திராத வேளையில் இயற்கைக்கப்பாற்பட்டு, கர்த்தர் அற்புதமாக பேதுருவை வெளியே கொண்டு வந்தார். நாமும் ஊக்கமாக ஜெபிக்கும்போது, நாம் நினைப்பதற்கும், வேண்டிக்கொள்கிறதற்கும் அதிகமாய் கர்த்தர் மேலான காரியங்களை செய்து கொடுப்பார்.

யூதர்கள் பேதுருவை கொலை செய்யும்படி நினைத்தார்கள். கர்த்தர் அவர்களின் எண்ணங்களின்படி நடக்கவிடாமல் தம்முடைய தூதனை அனுப்பி பேதுருவை விடுவித்து பாதுகாத்தார். **கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்** (சங்கீதம் *34:7*). இன்றைக்கும் பிரிய மானவர்களே! நமக்கு எதிராகவும், நம் குடும்பத்துக்கு எதிராகவும், நம் தொழிலுக்கும், வேலைக்கும் எதிராகவும், நம்மை அழிக்கும்படியாக பொல்லாத மனிதர்கள் பல தீய திட்டங்களையும், ஆலோசனைகளையும் பண்ணலாம். நாம் ஊக்கமாக கர்த்தரை நோக்கி ஜெபிக்கும்போது, கர்த்தர் அவர்கள் எண்ணங்களுக்கு நம்மை விடுவிடுத்து, பாதுகாப்பார். பேதுருவை ஏரோதின் கைக்கும், யூதஜனங்களின் எண்ணங்களுக்கும் விடுதலையாக்கின கர்த்தர் நம்மையும் நம் எதிரிகளின் கைக்கும், பொல்லாத மனிதர்களின் எண்ணங்களுக்கும் விலக்கி நம்மை பாதுகாப்பார்.

கர்த்தரை நேசித்து, அவருடைய வழிகளில் நடக்கிறவர்களை கர்த்தர் பாதுகாப்பார். அவர்களை சத்துருக்களின் இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுக்கமாட்டார். தம்முடைய தூதனை அனுப்பி நம்மை பாதுகாப்பார். ஆதலால் ஒருபோதும் சோர்ந்து போகக்கூடாது. உலகத்தில் இருப்பவனைக் காட்டிலும் நம்மோடிருக்கிற கர்த்தர் பெரியவர். அவரால் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமில்லை. நாம் அவரை நோக்கிக் கூப்பிடும்போது, இயற்கைக்கப்பாற்பட்ட விதத்தில் காரியங்களை செய்து கொடுப்பார். நமக்காக யுத்தம் செய்து எதிரிகளை முறியடிப்பார். எந்தவிதமான இக்கட்டான சூழ்நிலையானாலும் சரி, கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போது, அவர் நம் ஜெபத்திற்கு பதில் கொடுப்பார். எல்லா இக்கட்டுகளுக்கும், தொல்லைகளுக்கும் நம்மை விலக்கி விடுவிப்பார்.

### எசேக்கியாவின் ஜெபம்

யூதா தேசத்தை ஏசேக்கியா ராஜா ஆட்சி செய்தபோது, கர்த்தரை சார்ந்து வாழ்ந்தான். கர்த்தரோடுகூட ஐக்கியமாய் இருந்தான். தேசத்திலுள்ள விக்கிரகங்களை உடைத்துப் போட்டான். தன் தேசத்து ஜனங்களை கர்த்தருக்கு நேராய் வழிநடத்தினான். கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடந்தான். அவன் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, யூதாவின் ராஜாக்கள் அனைவரிலும் எசேக்கியாவைப்போன்று அவனுக்கு முன்னும் அவனுக்கு பின்னும் இருந்ததில்லை. கர்த்தரை விட்டு பின்வாங்கமல் அவருடைய வழிகளில் நடந்தான். ஆகையால் கர்த்தர் அவனோடுகூட இருந்தார். அதனால் செய்கிற அனைத்தும் வெற்றிகரமாக இருந்தது.

அசீரிய ராஜாவாகிய சனகெரிப் எருசலேமைத்தவிர யூதாவின் அரணானபட்டணங்களைப் பிடித்துக்கொண்டான். பின் தனது பெரும்படையை எருசலேமுக்கு அனுப்பி, எசேக்கியாவை தன்னிடம் சரணடையும்படி கூறினான். எசேக்கியா அதைக் கேட்டபோது, கர்த்தரை நோக்கி ஜெபித்தான். **இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே நீர் ஒருவரே பூமியின் ராஜ்யங்களுக்கெல்லாம் தேவனானவர்; நீர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்; கர்த்தாவே, நீர் உமது கண்களைத் திறந்து பாரும்; சனகெரிப் ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படிக்குச் சொல்லியனுப்பிய வார்த்தைகளைக் கேளும்** (2 இராஜாக்கள் *19:15,16*). **நீர் ஒருவரே தேவனாகிய**

**கர்த்தர் என்று பூமியின் ராஜ்யங்கள் எல்லாம் அறியும்படிக்கு, எங்களை அவன் கைக்கு நீங்கலாக்கி இரட்சியும் என்று விண்ணப்பம் பண்ணினான்** (2 இராஜாக்கள் 19:19). கர்த்தர் அவன் விண்ணப்பத்தைக் கேட்டார். தேசத்திற்கு ஆதரவாயிருந்து பாதுகாப்பேன் என்று வாக்கு கொடுத்தார். அன்று இரவு கர்த்தருடைய தூதன் அசீரியரின் பாளையத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரை கொன்றுபோட்டான். சனகெரிப் அங்கிருந்து போய்விட்டான். அவனது மகன்கள் அவனைக் கொன்றுபோட்டார்கள்.

எசேக்கியா நம்பிக்கையற்ற அந்த இக்கட்டான சூழ்நிலையிலும், கர்த்தர் தன்னை விடுவிக்கும்படியாக ஜெபித்தான். கர்த்தர் தம்முடைய தூதனை



அனுப்பி, யூத தேசத்தை அசீரியர்களின் கைகளிலிருந்து விடுவித்தார். சனகெரிப் மீண்டும் யுத்தத்திற்கே வரமுடியாதபடி மரித்துப்போனான். கர்த்தர் எப்படியாக எசேக்கியாவின் ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார் பாருங்கள். நாம் விசுவாசத்தோடு ஜெபிக்கும்போது, நம் ஜெபத்திற்கும் கர்த்தர் பதில் கொடுப்பார். எதிரிகள் உங்களை நெருக்குகிறார்களா? நீங்கள் சோர்ந்து போகும்படியான நம்பிக்கையிழக்கும் வார்த்தைகளைப் பேசி உங்களை வேதனைப்படுத்துகிறார்களா? உங்களுக்கு எதிராக கூட்டங்கூடுகிறார்களா? உங்களுக்கு எதிராக செயல்படுகிறார்களா? கர்த்தரை விட்டு பின்வாங்கச் செய்கிறார்களா? கர்த்தரை நோக்கி கூப்பிடுங்கள். பெரும் ஆபத்தான மோசமான சூழ்நிலையிலும் கர்த்தரை நோக்கி கூப்பிடும்போது, கர்த்தர் நம் ஜெபத்திற்கு பதில் கொடுப்பார். உங்களுக்காக உங்கள் எதிரிகளிடம் யுத்தம் செய்வார். உங்களுக்கு ஆதரவாயிருந்து எல்லா நெருக்கத்திலிருந்தும் கர்த்தர் உங்களை விடுவித்து பாதுகாப்பார்.

அனுதினமும் கர்த்தர் நம்மை வழிநடத்தும்படி ஜெபிக்க வேண்டும். எசேக்கியா, கர்த்தர் யார், எப்படிப்பட்டவர், அவரால் என்ன செய்ய முடியும் என்பதை அறிந்து வைத்திருந்தான். நாம் வேதத்தை படிக்கும்போது, கர்த்தர் எவ்வளவு வல்லமையும் பராக்கிரமும் உள்ள தேவன் என்பதை அறிந்து கொள்ளலாம். அப்பொழுது விசுவாசத்தோடுகூட ஜெபிக்க முடியும்.



எசேக்கியா ராஜா வியாதிப்பட்டு, மரணமடையும் நிலையில் இருந்தான். கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய ஏசாயா, எசேக்கியாவிடம் வந்து, **நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குப்படுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்** (2 இராஜாக்கள் 20:1). உடனே எசேக்கியா தனது முகத்தை சுவரின்பக்கம் திருப்பிக்கொண்டு கர்த்தரை நோக்கி இப்படியாக ஜெபித்தான்: **ஆ கர்த்தாவே நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணினான். எசேக்கியா மிகவும் அழுதான்** (2 இராஜாக்கள் 20:3).



எசேக்கியா வியாதியோடு, மரணமடையும் தருவாயில் இருந்தபோதும், மரணமடைவாய் என்ற செய்தியை கேட்டபோதும், மனந்தளராமல் கர்த்தரை நோக்கி உடனே கருத்தோடு ஜெபித்தான். தனக்கு சுகம் கொடுக்கும்படி உறுதியோடு கர்த்தரிடம் கேட்டான். கர்த்தர் அவன் ஜெபத்திற்கு உடனே பதில் கொடுத்தார். ஏசாயா பாதி முற்றத்தை விட்டு விலகுமுன் கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு வந்தது. கர்த்தர் அவனிடம் நீ திரும்பிப்போய் எசேக்கியாவிடம் போய் பேசு என்று கூறினார். கர்த்தர் சொன்னது என்னவென்றால், **உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ நான் உன்னை குணமாக்குவேன்; உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன்: உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்தேன் என்றார்** (2 இராஜாக்கள் 20:5,6).

கர்த்தர் எசேக்கியாவின் ஜெபத்திற்கு பதில் கொடுத்து, அவன் ஆயுசு நாட்களோடு பதினைந்து வருடங்களை கூட்டிக் கொடுத்தார். கர்த்தர் அவன் வியாதியை சுகப்படுத்தி அவன் ஜெபத்திற்கு பதில் கொடுத்தார்.

பிரியமானவர்களே! வியாதியினால் வேதனைப்பட்டு, மனக்கலக்கத்தோடு இருக்கிறீர்களா? கர்த்தரால் உங்கள் வியாதியை குணமாக்கி, அற்புத சுகத்தை தரமுடியும். விசுவாசத்தோடு ஜெபிக்கும்பொழுது கர்த்தர் நம் ஜெபத்திற்கு பதில் கொடுப்பார். விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது. எப்பேர்ப்பட்ட வியாதியையும் கர்த்தரால் சுகமாக்கமுடியும்.

எசேக்கியாவை எதிரிகள் சூழ்ந்து நெருக்கினபோதும், போராட்டமான அந்த சூழ்நிலையிலும், மரணதருவாயில் இருந்த வேளையிலும் கர்த்தரை நோக்கி ஜெபித்து, ஜெபத்திற்கான பதிலை பெற்றுக் கொண்டான்.

நாமும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போம், ஜெயம் பெறுவோம்.

# கர்த்தருக்கு மகிமை

- ஏஞ்ஜலின் தீப்தி



**வா**னங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது (சங்கீதம் 19:1), இயேசுவும் அவரது சீஷர்களும், ஒரு பிறவிக் குருடனை சந்திக்கிறார்கள். அவரது சீஷர்கள், அவன் குருடாய் இருப்பதற்கானக் காரணத்தை அவரிடம் கேட்கிறார்கள். பாவம்தான் அவன் குருடாய் இருப்பதற்கான காரணமாய் இருக்கலாம் என்று நினைத்து கேட்கிறார்கள்.

**இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்** (யோவான் 9:30) என்கிறார்.



எப்படி வானமும், நட்சத்திரங்களும் அவரால் உருவாக்கப்பட்டு, அவரது மகிமைக்கு சாட்சியாக இருக்கின்றதோ, அப்படிப்போல, அவரது அற்புதம் செய்யும் வல்லமையை வெளிப்படுத்தும்படி இவனை குருடாக உருவாக்கியுள்ளார். இயேசு உடனே களிமண்ணை எடுத்து அந்த குருடனின் கண்களில் பூசி, குணமாக்குகிறார். ஒரு அற்புதம் நடக்கிறது. அவனது பெற்றோரால் மறுக்க முடியாத ஒரு நிகழ்வு அது. பரிசேயருக்குள் பெரும்பாலோனார், ஒரு பாவியால் அற்புதம் செய்ய முடியாது என்று நம்புகின்றனர். இயேசு மறுபடியுமாக இன்னோரு முறை பரிசேயருக்குமுன்பாக இந்த அற்புதத்தைச் செய்து தாம் யாரென்பதை நிரூபிக்கிறார்.

மார்த்தாளும், மரியாளும் சகோதரிகள். தங்களது சகோதரனை நான்கு நாட்களுக்கு முன்பாக அடக்கம் பண்ணியதினிமித்தம் நம்பிக்கை



இழந்து காணப்படுகிறார்கள். அவன் வியாதியாய் இருந்தபோதே, இயேசுவை அழைக்கிறார்கள். அவர் ஜெபித்து அவனது வியாதியை சுகமாக்குவார் என்று. ஆனால், இயேசு வந்தபோதோ, காலம் கடந்துவிட்டது. அவனை அடக்கம் செய்து நான்கு நாட்களாகி விட்டது. அந்த சமயத்தில் இயேசு தம்முடைய சீஷர்களிடம் சொல்லுகிறார், **இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும், அதினால் மகிமைப்படுவார் என்றார்** (யோவான் 11:4).

அவரது சீஷர்கள் நம்பிக்கை இழந்து போனார்கள். அவர்கள், அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் (யோவான் 11:16) என்றார்கள். பெத்தானியாவை அடைந்தவுடன் இயேசு, மார்த்தாளுக்கு மறுபடி உறுதியளிக்கும்படி, **நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்** (யோவான் 11:40). இயேசு கல்லறைக்கு அருகே சென்றார். அதைப் பார்த்த ஜனங்கள், அவர் துக்கிக்கவும், அழவும் செல்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். அவர்களது கணிப்பு தவறாகும். அவரது மகிமையை வெளிப்படுத்தும்படி அவர் தயாராகிக் கொண்டிருந்தார். அங்கு மிகப்பெரியதொரு அற்புதம் நடக்கப் போகிறது, ஜனங்கள் இனிவரும் பல காலங்களுக்கு அதைப்பற்றி பேசப் போகிறார்கள். லாசருவை உயிரோடெழுப்பின உடனே, யூத ஜனங்களுக்குள்ளே பெரிய அமளி உண்டாகிறது. அநேக யூத ஜனங்கள், இயேசுவை விசுவாசித்து அவரைப் பின்பற்றி சென்றனர்.

அதேபோல பாபிலோனின் ராஜா நெபுகாத்நேச்சாரின் காலத்தில், அதிகாரிகள், பிரபுக்கள், ஆலோசனைக்காரர்கள் அனைவரும், ராஜா செய்து வைத்துள்ள தங்கத்திலான சிலையை வணங்கும்படி கட்டளை பிறக்கிறது. ஆனாலும், சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்நேகோ கர்த்தர்மேல் விசுவாசம் வைத்து, அந்த சிலையை வணங்க மறுக்கிறார்கள். ராஜாவிற்கு கோபம் உண்டாகிறது. அவர்களை எரியும் அக்கினி சூளையில் போடும்படி கட்டளையிடுகிறான். எப்போதையும்விட அது ஏழு மடங்கு அதிகமாக சூடாக்கப்பட்டிருந்தது. அங்கு அவர்களைச் சுற்றியிருந்த எல்லா ஜனங்களும், சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்நேகோ உள்பட அந்த நாளில் அவர்களது வாழ்க்கை முடியப் போகிறது என்று நினைத்திருப்பார்கள்.

எல்லோரும் ஆச்சரியப்படும்படியாக, நாலாவதாக ஒரு மனுஷன் தேவனுடைய குமாரன், அக்கினியின் நடுவிலே அவர்களுடனேகூட நடப்பதைக் கண்டார்கள். தலைமுடி ஒன்றுகூட கரிந்துபோகவில்லை. அந்த மூன்று மனிதர்களின் முடிவைப் பார்ப்பதற்குப் பதிலாக முழு தேசமும், சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்நாகோவின் தேவனைப் பற்றி தெரிந்து கொண்டார்கள். மேலும் அவரை நம்புவர்களை எப்படி காப்பாற்றுகிறார் என்பதையும் தெரிந்து



வேதம், பல அற்புதம் நடந்த சம்பவங்களையும், வாழ்க்கையையும், கர்த்தர் இடைபட்டதையும் அவரது வல்லமையை ஜனங்கள் கண்டதையும் சொல்கிறது. அவர் செய்த அற்புதங்கள் எண்ணிக்கையில் அடங்காது. அவரது சீஷன் யோவான் மிகச் சரியாகச் சொல்லுகிறான். இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன் (யோவான் 21:25).

கொண்டார்கள்.

நெபுகாத்நேச்சார் தன் வாயினால் கர்த்தரை புகழ்ந்தான். சாத்ராக், மேஷாக் ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப்போடப் படுவான்; அவன் வீடு எருக்களமாக்கப் படும் என்று என்னாலே தீர்மானிக்கப் படுகிறது; இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான் (தானியேல் 3:29).

ஏன் இப்படியாகக் காரியங்கள் நடக்கிறது என்றால், நம்பிக்கை இழந்து, மனமுடைந்து போன நிலையிலிருந்து மகிழ்ச்சிக்கு நேராக நடத்தி, ஜனங்களை கர்த்தர் தம்மண்டை கொண்டு வருவதற்காகவே. ஒன்றை நிச்சயமாகச் சொல்லலாம். அவர், தமது மகிமையை வெளிப்படுத்தும்போது, அது பெரிய காரியமாக இருக்கும். அது பிரமிக்கத்தக்கதாக இருக்கும். இதுவரை நடந்திராததாக இருக்கும். எல்லாராலும் பேசப்படும். ஆமென்!


**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**



**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா




# தீர்க்கதரிசியும் தீர்க்கதரிசனமும்

*- பால்ராஜ் கென்னடி*

**தொடர்ச்சி...**

முழுமையாக, அவருடைய சித்தத்திற்கு நம்மை வனைந்து எடுக்கும்படி கொடுக்க வேண்டும். நமது சுயத்தை (சுய சிந்தை, சுய எண்ணங்கள், சுய விருப்பம், சுய தீர்மானங்கள், சுய கணிப்புகள்..), அவர் உடைத்து, நாம் எப்படியாக இருக்க வேண்டுமோ, அப்படியாக உருவாக்குவார். இந்த உருவாக்குதல் முடியும்வரை, நாம் வெளிவர அவசரப்படக் கூடாது. அதில் முழுமை வேண்டும். ஒவ்வொரு நாளும் நாம் ஆவியில் வளர வேண்டும். நம்முடைய ஒவ்வொரு அசைவும், கர்த்தருடைய சித்தப்படி இருக்க வேண்டும். அவர் சொல்லாமல், நாமாக எதையும் செய்யக் கூடாது. மிக முக்கியமானக் காரியம், கர்த்தர் இப்படித்தான் என்று நாமாக ஒன்றை தீர்மானித்துவிடக் கூடாது.

கர்த்தரை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். கர்த்தரைப்பற்றி, அவரே நமக்கு வெளிப்படுத்துவார். முதலாவது, அவரது சிந்தை, சித்தம் இவற்றையும், இரண்டாவது, நம்மைப்பற்றியும் (நம்முடைய அபிஷேகம், அழைப்பு, தரிசனம்), மூன்றாவது, மற்றவைகளைப்பற்றி (சபை, ஜனங்கள், தேசங்கள், பரலோகம், நரகம்) நம்மிடம் வெளிப்படுத்துவார். நாம், அவரது பலத்த கரத்துக்குள்ளாக அடங்கி இருந்தால்மாத்திரமே இவையெல்லாம் சாத்தியம். கர்த்தர், நம்மை சார்ந்து இருக்கிறார். இந்த பூமியில் கர்த்தர் எதையும் அவரே செய்ய மாட்டார். மனுஷர்கள் மூலமே செய்வார். நாம், அவருக்கு அவசியம்.

**7. நமது ஐக்கியம் யாரோடு என்பது முக்கியம்**

ஆவிக்குரிய வளர்ச்சியுடையவன், கர்த்தருக்குப் பிரியமில்லாத வழியில் நடப்பவனோடு ஐக்கியம்கொண்டிருந்தால், இவனது வாழ்க்கையில் இருள் வந்துவிடும். எப்படியெனில், தெளிந்த சிந்தை போய்விடும். குழப்பம் ஏற்படும். ஆவிக்குரிய பார்வை போய்விடும். மேலோட்டமாகப் பார்க்க ஆரம்பிப்பான். சிந்திப்பதில் கூர்மை போய்விடும். சிந்தை, மழுங்கிப் போகும். மனோதிடன் போய்விடும்.பேச்சு, நடத்தை எல்லாம் தடுமாறும். நிலையான புத்தி போய்விடும். இவையெல்லாம் ஏன் நடக்கிறதுஎன்று ஆராய்ந்து பார்த்தோமானால், கர்த்தரோடு கூட உள்ள ஐக்கியம் போய்விடுவதினாலேயே (ஜெபம், வேதத்தைத் தியானித்தல், உபவாசம்..). நாம், யாரோடு ஐக்கியம் கொள்கிறோம் என்பது மிக முக்கியமானக் காரியமாகும். கர்த்தரோடு நெருங்கி வாழாதவனோடு ஐக்கியம் வைத்துக்கொள்ளக்கூடாது. வேதத்தை மையமாக வைத்து வாழ்பவர்களோடு நாம் ஐக்கியம் வைத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்டவர்களை எப்படி அடையாளம் கண்டுகொள்வதென்றால், (1) இயேசுவை தங்களுடைய வாழ்க்கையில் தலையாக வைத்திருப்பார்கள் (2) மெய்யான (உண்மையான) அன்பு இருக்கும் (3) உள்ளதை உள்ளதென்றும், இல்லாததை இல்லாதது என்றும் சொல்வார்கள் (4) மனிதரைப் பிரியப்

படுத்தும்படியாக இருக்கமாட்டார்கள். கர்த்தருக்குப் பிரியமாக இருப்பார்கள் (தேவ சித்தத்திற்கே முக்கியத்துவம் கொடுப்பார்கள்) (5) அவர்களுடைய எல்லா செயல்களிலும், பேச்சிலும் மாய்மாலம் இருக்காது (6) சுய நலம் இருக்காது (7) எளிமை இருக்கும். ஆடம்பரம் இருக்காது (8) மூடி மறைத்தோ, மறைமுகமாகவோ பேச மாட்டார்கள் (9) அந்தந்த நேரத்திற்கு அந்தந்த காரியங்களை செய்பவர்களாக இருப்பார்கள்.

இயேசு கிறிஸ்துவின் குணாதிசயங்கள், அவர்களிடத்தில் காணப்படுகிறதா என்று பார்த்தாலே போதும். இதுவே ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளம். ஒருவனுக்குள் இயேசு எவ்வளவு இருக்கிறார், இயேசுவுக்குள் ஒருவன் எவ்வளவு இருக்கிறான் என்பதே காரியம்.

**8. ஆவியில் வளர வேண்டுமென்ற வாஞ்சை முக்கியம்**

நாம் ஆவியில், உள்ளார்ந்த மனுஷனில் வளர, முதலாவது நான் ஆவியில் வளர வேண்டும் என்ற வாஞ்சை வேண்டும். அந்த எண்ணம் இருந்தால்தான், அதற்கான செயலில் ஈடுபட முடியும். ஆர்வம், ஈடுபாடு, தாகம் வேண்டும். அப்போதுதான் தொடர்ந்து அதற்காக உழைக்க ஆரம்பிப்போம். இப்படிப்பட்டவர்களே ஆவியில் பெலன்கொண்டு, வளர ஆரம்பிப்பார்கள். என் தனிப்பட்ட வாழ்க்கையில், சில குறிப்பிட்ட தேவ மனிதர்களின் பிரசங்கங்களை பல வருடங்களாகத் தொடர்ந்து கேட்கவும், படிக்கவும் செய்தேன். நான் கற்றுக்கொண்டக் காரியங்களை எழுதினேன். வேதத்தில் ஒரு குறிப்பிட்டக் காரியத்தில் அவர்கள் கொடுத்த வெளிச்சம், மற்றக் காரியங்களை நான் பார்ப்பதற்கு உதவியாக இருந்தது. எனது பேச்சு, எழுத்து, பிரசங்கம் எல்லாம் செம்மையானது. எனது பார்வை, நோக்கம், சிந்தை எல்லாம் செம்மைப்படுத்தப்பட்டது. சில குறிப்பிட் டக் காரியங்களை தேடி எடுத்து, படித்து தெரிந்து கொண்டேன். எனது வாழ்க்கையின் முழு நோக்கமே வேதத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்பதே. எனக்கு எவ்வளவு படிக்க முடியுமோ அவ்வளவு வேதத்தைப் படிக்கிறேன். எனது ஆர்வமும், அதற்காக நான் உழைத்ததுமே நான் ஆவியில் வளர்வதற்கானக் காரணங்கள்.

எந்தக் காரியத்தையும் நான் கவனமாகப் படித்தேன். எனக்கு ஏற்கனவே தெரிந்த காரியத்தையும்கூட மற்றவர்கள் எப்படி சொல்லுகிறார்கள் என்று படித்துத் தெரிந்து கொண்டேன்.

நான், கேட்பதற்கும், படிப்பதற்கும் சில குறிப்பிட்ட பிரசங்கிமார்களைத் தெரிவு செய்தேன். ஆழமானக் காரியங்களை, தெளிவாக சொல்லுகிறவர்களை, அதிலும் முக்கியமாக பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடுகளையேப் பேசுகிற பிரசங்கிமார்களைத் தெரிந்தெடுத்தேன். பிரபலம் என்பதை நான் பார்க்கவில்லை. இப்படி ஏற்கனவே தேவனிடமிருந்து வெளிப்பாடுகளைப் பெற்ற தேவ மனிதர்களின் பிரசங்கங்களைப் படித்து அறிந்து கொண்டது, தேவனிடமிருந்து மேற்கொண்டு வெளிப்பாடுகளை நான் பெற உதவியாக இருந்தது.

திரித்துவத் தேவன், வேதத்தை பிரதானமாகக் கொள்ளுதல், பரிசுத்த ஆவியின் அபிஷேகம், வரங்கள் இவைகளில் நம்பிக்கை வைத்திருத்தல் - இவைகளையுடையவர்களையே நான் படிக்கவும், கேட்கவும் தெரிந்து கொள்கிறேன். இவைகளில் ஒன்று இல்லையென்றாலும், நான் அவர்களுடையதைப் படிக்கவோ, கேட்கவோ மாட்டேன். முக்கியமாக, வேதத்தில் இல்லாததை சொல்லுபவர்களை, வேதத்தில் சொல்லப்பட்டவைகளுக்கு முரணாக சொல்லுபவர்களை புறக்கணித்து விடுகிறேன். இது ஆபத்து. இந்தக் காரியத்தில் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

இயேசுவை, ஆண்டவர் என்று அறிக்கை செய்பவனே சரியான ஆவியுடையவன். அதுவே தேவனிடத்திலிருந்து வரும் ஆவி (1 யோவான் 4:1-3).

**9. போதகரின் வளர்ச்சி முக்கியம்**

ஒரு போதகர், ஆழமான சத்தியத்தினால் உருவாக்கப்படுவது அவசியம். ஸ்தலத்தை, கட்டிடத்தைக் கட்டுவதும் அவசியம்தான். சபை கட்டிடத்தை கட்டுவதிலும், கம்பளம், விளக்கு, குளிர்பதன வசதி, நாற்காலிகள் இவைகளில் கவனம்



செலுத்தும் போதகர், தான் ஆழமான சத்தியங்களை வேதத்திலிருந்து தெரிந்து கொண்டு, கர்த்தருக்குள் உருவாக வேண்டுமென்பதில் மிக கவனமாக இருக்க வேண்டும். கட்டிடத்தைக்காட்டிலும் போதகர் ஆவியில் கட்டப்படுவது அவசியம். ஒரு போதகர்,வேதத்திலிருந்து எவ்வளவு வெளிச்சத்தைப் பெறுகிறாரோ, அந்த அளவு சபை வளரும் (சபை ஜனங்கள் ஆவியில் வளர்வார்கள்). போதகர் கற்றுக்கொண்டால் தான், ஜனங்களுக்குக் கற்றுக்கொடுக்க முடியும். போதகர், மேலோட்டமாக நுனிப்புல் மேய்ந்தால், அவரது சபை ஜனங் களும் அப்படித்தான் இருப்பார்கள். படிக்கும் காரியத்தில், ஒரு போதகருக்கு, ஒரு திட்டம், ஒழுங்கு அவசியம். தான் உருவாக வேண்டும், வளர வேண்டும் என்பதில் மிகவும் அக்கறை உள்ளவராக இருக்க வேண்டும். ஆவிக்குரிய புத்தகங்களைப் படிக்கும் பழக்கம் இருக்க வேண்டும். தெரிந்தெடுத்து படிக்க வேண்டும். சில குறிப்பிட்ட பிரசங்கிமார்களின் புத்தகங்கள் மற்றும் பேச்சுக்களைத் தொடர்ந்து படிப்பவராக, கேட்பவராக இருக்க வேண்டும். போதகர், ஒவ்வொரு காரியத்திலும் தெளிவுபெறுவது, சபை ஜனங்களுக்கு போய்ச் சேரும். அப்போது சபை ஆவியில் வளரும். சபை ஜனங்களை, போதகர், தன்னுடைய சொந்த பிள்ளைகளைப்போல பார்க்க வேண்டும். அந்த குறிப்பிட்ட ஜனங்களைக் கர்த்தர், அந்த போதகரிடம் கொடுத்திருக்கிறார். அதனால், பொறுப்பாய் நடத்த வேண்டும். ஊழியத்தை உற்சாகமாய், சந்தோஷமாய் செய்யவேண்டும். பாரமாக நினைக்கக் கூடாது. ஊழியம் செய்யவேண்டிய பெலனை(அபிஷேகம், வரங்கள், கிருபை, ஞானம், பொறுமை..) கர்த்தர் தருவார்.

**10. கர்த்தருக்கும் நமக்குமிடையே உள்ள உறவு - நம் நிலைமை**

நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையை நாம் எப்போதும் அலசி, ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதை தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும். கர்த்தர் நம்மேல் வைத்துள்ள அன்பு, கிருபை, தயவு, இரக்கம் இவற்றை சிந்தித்து பார்க்க வேண்டும். இப்படி சிந்தித்துப் பார்க்கும்போது, கர்த்தர் எப்படியாக நம்மோடு இடைபட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை நாம் காணமுடியும். அவர் நம்மோடு எப்படி இணைந்து காணப்படுகிறார் என்பதை அறிவோம். இதுவே நமது ஆவிக்குரியக் கண்கள் திறக்கப்படுவதாகும். அவர் செய்வதெல்லாம், நமது உள்ளார்ந்த மனுஷனில் விளைச்சலை அல்லது விளைவை உண்டுபண்ணவே. நம்மை அவர் நெருங்கி வருகிறார். இவற்றையெல்லாம் நாம் யோசித்துப் பார்த்தோமானால், நாம் அவரை நெருங்கி செல்வோம். கர்த்தரோடுகூட உள்ள உறவே நமது ஆவிக்குரிய வளர்ச்சி யின் அடையாளம். வெளிப்புறமாக அல்ல, உள்ளார்ந்த மனுஷனுக்கும் கர்த்தருக்கும் உள்ள உறவே சரியானது. நமது ஜெபம், ஆலோசனை, பிரசங்கம், பேச்சு, எழுத்து எல்லாமே இப்படி, ஜனங்களை உள்ளார்ந்த மனுஷனை கர்த்தரண்டை நெருங்க வைப்பதாக இருக்க வேண்டும்.

**11. உள்ளான மனுஷனை பார்க்க வேண்டும்**

வெளிப்புறத்தை பார்க்காமல், உள்ளான மனுஷனைப் பார்ப்பதே ஆவிக்குரிய முதிர்ச்சியாகும். மனுஷன், முகத்தைப் பார்ப்பான்; ஆனால், கர்த்தரோ, இருதயத்தைப் பார்க்கிறார் (1 சாமுவேல் 16:7). ஒரு மனுஷனின் நிறம், உயரம், அழகு, ஜாதி, பதவி, பணம், செல்வாக்கு, அந்தஸ்து இவற்றைப் பார்த்தால், அவன் ஆவிக்குரியவன் அல்ல. நல்ல குணங்களை, எண்ணங்களை, நோக்கங்களை, தாகத்தை, அன்பை பார்ப்பவர்களாக நாம் இருக்க வேண்டும். ஒரு மனுஷனுக்கும் தேவனுக்குமிடையே உள்ள உறவை நாம் பார்க்க வேண்டும். அந்த மனுஷன் தேவன்மேல் எவ்வளவு பற்றுதலாய் இருக்கிறான் என்று பார்க்க வேண் டும். அந்த பற்றுதலும், கண்மூடித்தனமாக இருக்கக் கூடாது. வேதத்தின் வார்த்தைகளை வைத்து கர்த்தரைத் தேடுபவனாக, கர்த்தர்மேல் தாகமுள்ள வனாக இருக்க வேண்டும். சடங்காச் சாரமாக பக்தியாய் இருத்தல் கூடாது. உள்ளார்ந்த மனுஷன், தேவன்மீது பற்றுதலாய் இருக்கவேண்டும். தேவனுக்குப் பயந்தவனாய் இருக்க வேண்டும். கிறிஸ்துவின் சிந்தை உள்ளவனாக இருக்க வேண்டும்.